**மஸ்கெலியா பிரதேச சபையின் 2022.04.11 சபையமர்வு அறிக்கை**

2022.04.11ஆம் திகதி காலை 09.30 மணியளவில் கௌரவ தவிசாளர் G.செண்பகவள்ளி அவர்களின் தலைமையில் சபையமர்வு ஆரம்பமானது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இன்றைய சபையமர்விற்கு வருகை தந்துள்ள அனைவரையும் அன்புடன் வரவேற்பதோடு கடவுள் வணக்கத்துடன் இன்றைய சபையமர்வானது ஆரம்பமாகும். அடுத்ததாக கடந்த மாத சபையமர்வு அறிக்கையினை சபை அனுமதிக்காக முன்வைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கடந்த சபையில் நான் முன்வைத்த பிரேரணைகளுக்கு அமைவாக கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளளவா? அவ்வாறு அனுப்பப்பட்டிருந்தால் அவற்றிற்கான பிரதிகளை பெற்றுத்தரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கடந்தெ சபையில் கௌரவ உறுப்பினர் ஆனந்தன் அவர்களினால் ஆயுர்வேத வைத்தியசாலை தொடர்பான பிரேரணை முன்வைக்கப்பட்டு ஏனைய கௌரவ உறுப்பினர்களினாலும் அவ்விடயம் தொடர்பாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன, அதற்கமைவாக தீர்மானத்திற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளனவா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

மே மாதம் 20ம் திகதியளவில் சாமிமலையில் நடமாடும் சேவையினை நடாத்த ஏற்பாடுகளை செய்யவுள்ளோம், அத்துடன் தேவையான மருந்து வகைகளை கோரி கடிதமனுப்பியுள்ளோம்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

கடந்த சபையில் வீதி விளக்கு பாவனையினை குறைத்தல் தொடர்பான கடிதம் சபைக்கு முன்வைக்கப்பட்டிருந்து. 50%இனை குறைக்க தான் கூறியுள்ளார்களே தவிர புதிய வீதி விளக்குகளை பொருத்தல், ஏற்கனவே உள்ள மின்விளக்குகளை திருத்துதல் தொடர்பாக எந்த கடிதமும் இதுவரையிலும் அனுப்பப்படவில்லை. அண்மை காலமாக மின்விளக்குகள் தொடர்பான எந்த வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படவில்லை. உதாரணமாக ரதபோட் பாலத்திற்கண்மையிலுள்ள மின்குமிழ் பழுதடைந்து 01வருட காலமாக போகின்றது, இன்றுவரையில் அதனை திருத்தம் செய்து பொருத்தவில்லை. லக்கம் கோவிலுக்கு அண்மையிலுள்ள மின்குமிழும் அதே போன்று தான். இது ஒரு வேதனைக்குரிய விடயம், அண்மையில் போடப்பட்ட 02 மின்குமிழ்களை பொருத்தும் போதே பழுதாகி விட்டன அவற்றிற்கு என்ன நடந்ததென்று தெரியவில்லை. இவ்வாறன விடயங்களினால் எங்களால் பொதுமக்களுக்கு பதில் கூற முடியாத நிலை உள்ளது. 20ம் திகதிக்கு முன்னராக இவற்றிற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். கடந்த வருடம் பாதீட்டு நிதியில் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களினால் ஒதுக்கப்பட்ட வீதி விளக்கு பொருத்தும் வேலைத்திட்டத்தில் எனக்கு ஒதுக்கப்பட்ட வீதி விளக்கு பொருத்தும் வேலைத்திட்டத்தில் எனக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 03மின்விளக்குகள் மாத்திரமே பொருத்தப்பட்டுள்ளது. ஆகவே 50%இனால் குறைக்க தான் சொல்லியுள்ளனரே தவிர முற்றாக வீதி விளக்கு பொருத்த வேண்டாமென எங்கும் குறிப்பிடப்படவில்லையே, ஏற்கனவே வந்ததை சரி போட்டு முடிக்க வேண்டும் தானே அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கடந்த சபையில் நடமாடும் சேவை தொடர்பான பிரேரணைக்கான தீர்மான அடிப்படையில் உரிய இடங்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டனவா? அனுப்பப்பட்டிருந்தால் அதன் பிரதிகளை உரிய உறுப்பினர்களுக்கு பெற்றுக்கொடுக்கவும், அதேவேளை அந்தந்த வட்டாரம் என்று குறிப்பிட்டிருந்தாலும் சாமிமலை பிரதேசத்தில் 03 வட்டாரங்களையும் 04 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் ஒன்றிணைத்து பிரதேச செயலகத்தினூடாக HTO நிறுவனத்தினால் பாரியவொரு நடமாடும் சேவை நடைபெற்றது, இதற்காக பிரதேச செயலகத்திற்கும் HTO நிறுவனதிற்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். அதே வேளை அதில் நிறைய குறை நிறைகள் காணப்பட்டதாக மக்கள் தெரிவித்திருந்தனர் ஆகவே மீண்டுமொருமுறை சாமிமலை பிரதேசத்தில் நடமாடும் சேவையொன்றை நடாத்த பிரதேச செயலகத்திற்கு கடிதமனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.நித்தியானந்தன் அவர்கள் (இ.தொ.கா)**

2022.03.14ம் திகதி சபையமர்வு அறிக்கை சரியென நான் முன்மொழிகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள் (இ.தொ.கா)**

அதனை நான் வழிமொழிகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இடையூறுக்கு மன்னிக்க வேண்டும், இந்த சபையிலே தவிசாளர் உள்ளிட்ட சபை நிர்வாகம் மற்றும் செயலாளர் தமிழ்மொழியிலே பேசக்கூடியவர்கள். அந்த அடிப்படையில் கடிதங்கள் அனுப்பப்படுவது சகோதரமொழியிலே காணப்பட்டாலும் கூட அதனொரு பகுதியினை தமிழ்மொழியிலும் இணைக்க வேண்டும். ஒன்று இதனை மொழிபெயர்ப்பு செய்ய வேண்டும், அல்லது கடிதம் தயாரிக்கும் போதே கீழே தமிழ்மொழியிலும் இருக்க வேண்டும். சகோதரமொழியில் குறிப்பிட்ட விடயங்களை நாம் தெரிந்துக்கொள்ள வேண்டுமாயின் இன்னொரு சகோதரமொழி அங்கத்தவரை தான் நாடவேண்டியுள்ளது. பிரதேச செயலகமோ அல்லது வேறு இடங்களில் இருந்து வருகின்ற கடிதமெல்லாம் 02 மொழிகளிலும் உள்ளன. வேண்டுமானால் ஒட்டுமொத்த கடிதங்களையும் சமர்ப்பிக்கின்றேன். சில சந்தர்ப்பங்களில் மொழி தொடர்பாக ஆய்வினை செய்த நிறுவனத்திற்கு எமது சபையின் 20இற்கு மேற்பட்ட கடிதங்களை தான் சமர்ப்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது, அனைத்தும் சகோதரமொழியில் தான் இருந்தது, இது அசௌகரியத்தை ஏற்படுத்தும் ஒரு விடயமாக உள்ளது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கடிதங்கள் அனுப்பும் போது 02 மொழியிலும் அனுப்ப முடியாது தானே?

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ தவிசாளர் அவர்களே, 02 மொழிகளிலும் அனுப்புவதனூடாக தான் எங்களுடைய மொழிக்கான அங்கீகாரம் ஒன்று இருக்கும். நிர்வாக ரீதியாக பிரச்சினைகள் இருக்கலாம், ஆனால் எல்லா அரச நிறுவனங்களின் நிர்வாக பொறிமுறையின் கீழ் 02 மொழியும் கட்டாயம் என்று உள்ளது. இவ்வாறான கடிதங்கள் சகோதரமொழியிலும் அனுப்பப்பட்டு அது தொடர்பான ஏதேனும் பிரச்சினைகள் காணப்பட்டால் அது சிக்கலை ஏற்படுத்தும், எனவே தவிசாளர் அவர்கள் இது தொடர்பாக பொறுப்பை முற்றுமுழுதாக ஏற்றுக்கொண்டு, எதிர்காலத்தில் மறுபக்கத்திலாவது கடிதங்கள் தமிழ்மொழியில் இருக்க வேண்டும். கௌரவ தவிசாளர் அவர்களே இங்குள்ள ஏதாவது பிரச்சினை ஒன்று தொடர்பாக புரிதலை ஏற்படுத்த வேண்டும், என எடுத்துக்கொள்வோம், அந்த புரிதல் தொடர்பாக சகோதரமொழியில் கூறும் போது அவ்விடயம் தொடர்பாக புரிந்துக்கொள்ள கடினமாக இருக்கும். ஆனால் தமிழ் மொழியிலே கடிதங்கள் செல்லும் போது அமைச்சுக்களிலோ, அரச நிறுவனங்களிலோ தனியாக மொழிப்பெயர்பாளர்கள் உள்ளனர். சனாதிபதி செயலகத்தில் இருந்து கூட தமிழ்மொழியில் கடிதங்கள் வந்துள்ளன. அதனை நான் செயலாளரின் அவதானத்திற்கும் சமர்ப்பித்திருந்தேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

சரி கௌரவ உறுப்பினர் அவர்களே இனிவரும் காலங்களில் தாங்கள் குறிப்பிடுவது போல தமிழ்மொழியிலும் இணைக்கப்படும்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

தாங்கள் கூறுவது எனக்கு விளங்குகின்றது இனிவரும் காலங்களில் செய்யலாம், ஆனால் ஏற்கனவேயுள்ள கடிதங்கள் தொடர்பாக நாளை மனித உரிமை சார்ந்து செயற்பாட்டாளர்களோ, தமிழ்மொழியில் கடிதம் வழங்கப்படவில்லை என்று கூறினால் நான் 20ற்கு மேற்பட்ட கடிதங்களை நான் சமர்ப்பித்துள்ளேன். பிரதேச செயலகத்திலுள்ள கடிதங்களையும் சமர்ப்பித்துள்ளேன், பிரதேச ஒருங்கிணைப்பு கழு கூட்டத்திற்கு வரும் கடிதத்தை எடுத்துக்கொண்டால் 02 மொழிகளிலும் இருக்கும். இது நிர்வாக ரீதியான பிரச்சினை உள்ளது, எனவே 02 மொழிகளிலும் இருக்க வேண்டும். இவ்விடயத்தை அரசியல் ரீதியாக அணுகினால் ஊடகத்தை நாடுவது இன்று ஒரு செய்தி தான். ஒரு உதாரணத்திற்காக கூறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

2018ம் ஆண்டு 05ம் மாதமளவில் எமது பிரதேச சபையினூடாக பயன்பெறும் நபர்களுக்கு கடிதமனுப்பும் போது தமிழ்மொழியில் அனுப்பப்பட வேண்டும் என்று பிரேரணை முன்வைக்கப்பட்டிருந்தது, இன்றுமே

முச்சக்கரவண்டி சாரதி ஒருவருக்கு கடிதமனுப்ப வேண்டும் என்றால் சிங்கள மொழியில் தான் அனுப்புகின்றோம். அவர்கள் எங்களிடம் கேட்கின்றனர். அவ்வாறான கடிதங்களை தமிழ்மொழியில் அனுப்புங்கள்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

முச்சக்கரவண்டி சாரதிகளுக்கு கடிதமனுப்பும் போது தமிழ்மொழியிலும் உள்ள கடிதங்களில் நான் கையயொப்பமிட்டுள்ளேனே? முச்சக்கரவண்டி தரிப்பிட தலைவர் சகோதரமொழியை சார்ந்தவரென்றால் அவருக்கு சகோதரமொழியில் தான் அனுப்புவோம். இனிவரும் காலங்களில் பார்ப்போம்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

சகோரதரமொழியிலுள்ள கடிதங்கள் பலவற்றை நான் கோவையிட்டு வைத்துள்ளேன், பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்படும் கடிதங்கள் கூட சகோதரமொழியில் தானே அனுப்பப்படுகின்றது, அங்கு 100இற்கு மேற்பட்ட தமிழ் உத்தியோகத்தர்கள் உள்ளார்கள் தானே? தாங்களும் கேளுங்கள், பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டத்தில் நாங்களும் அதற்கான அழுத்தமொன்றை வழங்குவோம்.

**தீர்மான இல 01**

இனிவருங்காலங்களில் சபையினூடாக அனுப்பப்படும் கடிதங்களை மொழிபெயர்ப்பு செய்து 02 மொழிகளிலும் அனுப்ப சபை ஏகமனதாக தீர்மானித்தது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக சபைக்கு கிடைக்கப்பெற்ற கடிதங்கள் மற்றும் முறைப்பாடுகளை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கடித இல 01**

**அனுப்புனர்** - கௌரவ உப தவிசாளர் P.P.பிரதீபன் அவர்கள்

**விடயம்** - 2022.04.11ம் திகதி சபையமர்விற்கான விடுமுறை கடிதம்.

**கடித இல 02**

**அனுப்புனர்** - கௌரவ உறுப்பினர் K.L.A.ரஞ்சனி அவர்கள்

**விடயம்** - 2022.04.11ம் திகதி சபையமர்விற்கான விடுமுறை கடிதம்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர்களின் விடுமுறை கடிதத்தினை நான் முன்மொழிகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் T.வசந்தகுமார் அவர்கள் (இ.தொ.கா)**

அதனை நான் வழிமொழிகின்றேன்.

**தீர்மான இல 02**

கௌரவ உறுப்பினர்களின் விடுமுறைக்கு சபை அனுமதி வழங்கியது.

**கடித இல 03**

**அனுப்புனர்** - பிரதேச செயலகம் - அம்பகமுவ கோரளை

**விடயம்** - கமசமகபிளிசந்ர வேலைத்திட்டம் தொடர்பான கடிதம்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

02ம் கட்ட வேலைத்திட்டத்தில் சில முன்வைப்புகள் இணைக்கப்படவில்லை எனவே இது தொடர்பாக பிரதேச செயலகத்திற்கு வேண்டுகோள் ஒன்றை முன்வைத்து கடிதமொன்றை அனுப்பவும்.

**கடித இல 04**

**அனுப்புனர்** - உள்ளூராட்சி துணை ஆணையாளர் காரியாலயம்.

**விடயம்** - மஸ்கெலியா பிரதேச சபைக்கு இடங்களை பெற்றுக்கொடுத்தல் தொடர்பான கடிதம்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கடந்த காலங்களில் நோட்டன் வீதி பதிவு செய்யப்படவில்லையே பிரேரணை முன்வைத்திருந்தேன், அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது அதற்காக சபைக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கடித இல 05**

**அனுப்புனர்** - C.T.பெருமாள் - சாமுண்டேஸ்வரி பாமசி.

**விடயம்** - நூலகத்துக்கான பத்திரிகை கொள்வனவு தொடர்பான கடிதம்.

**தீர்மான இல 03**

மேற்குறிப்பிட்ட கடிதத்திற்கு அமைவாக நூலகத்திற்கான பத்திரிகைகளை கொள்வனவு செய்யும் போது அதற்கான விலையேற்றத்திற்கு அமைவாக விலைப்பட்டியலை செலுத்த சபை அனுமதி வழங்கியது.

**கடித இல 06**

**அனுப்புனர்** - இலங்கை உள்ளூராட்சி திணைக்களம்.

**விடயம்** - பயிற்சி வேலைத்திட்டம் தொடர்பான கடிதம்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

நிதிக்குழுவிற்கும் இவ்விடயம் முன்வைக்கப்பட்டிருந்தது. 03 நபர்களை கேட்டிருந்தனர், அதனால் ஒருவரை மாத்திரம் அனுப்பவும் அவ்விடயங்களையும் நடைமுறைப்படுத்த கூடிய வகையிலான ஒருவரை அனுப்பவும்.

**தீர்மான இல 04**

மேற்குறிப்பிட்ட பயிற்சி பட்டறைக்கு ஒரு உத்தியோகத்தரை மாத்திரம் அனுப்புவதற்கு சபை தீர்மானித்தது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக நிதி மற்றும் ஏனைய குழு அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

நிதிக்குழு அறிக்கையில் விடய இலக்கம் 07இன்படி களியாட்ட நிகழ்வுகளை நடாத்த நிதிக்குழு சிபாரிசு செய்துள்ளது. அதன் மூலம் சபைக்கென்ன இலாபம் கிடைக்கின்றது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

மைதானத்தை பெற்றுக்கொள்வதற்கான கட்டணமும் களியாட்ட வரியும் சபைக்கு செலுத்தப்படும்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

டென்டர் இல்லாமல் செய்யலாமா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

வேறு யாரும் கேட்கவில்லையே, மைதானத்தை Booking செய்து அவர்கள் களியாட்ட நிகழ்வுகளை செய்கின்றனர்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இவ்விடயத்தில் கடந்த தடவை போல் அல்லாமல் சபைக்கு பிரச்சினை ஏற்படாமல் இருக்கும் வகையில் பார்த்துக்கொள்ளவும், கட்டணங்கள் தொடர்பாக குழப்ப நிலை ஏற்படாமல் இருக்க வழிவகை செய்யவும்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இந்த களியாட்ட நிகழ்வுக்கான அனுமதி கொடுப்பதோ அல்லது சிபாரிசு செய்வது தொடர்பாக நிதிக்குழு கலந்துரையாடியுள்ளது. மைதானத்தை பெற்றுக்கொடுப்பது என்பது மஸ்கெலியா பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்டமையினால் அதனை நிதிக்குழு சிபாரிசு செய்துள்ளமையினை நான் வரவேற்கின்றேன் அதேவேளை இன்றைய நாட்டின் சூழ்நிலை மற்றும் ஏனைய விடயங்களும் கருத்திற்கொள்ளப்பட வேண்டும் என்பது எனது கருத்து. ஏனென்றால் அவர்கள் அறவிடப்போகும் டிக்கட் கட்டணம் எவ்வளவு? அது மக்களுக்கு ஏற்றதாக இருக்குமா? மக்களுக்கு அசௌரியத்தை ஏற்படுத்துமா என்பதில் கவனம் செலுத்த வேண்டும். கௌரவ தவிசாளர் அவர்கள் இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இன்றைய சூழ்நிலையில் களியாட்ட நிகழ்வுகளுக்கோ அல்லது விழாக்களுக்கு அழைப்பு கொடுக்கும் சந்தர்ப்பத்தில் நுவரெலியா வசந்தக்காலத்தை உதாரணமாக கொள்ளவும், ஏனென்றால் நுவரெலியா வசந்தகால நிகழ்வுகள் ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் அங்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளது. ஆரம்ப நிகழ்வே இரத்து செய்யப்படும் அளவிற்கு இந்த ஆர்பாட்டம் செல்வாக்கு செலுத்தியிருந்தது. இவ்விடயங்கள் இங்கு நடக்கலாம் நடக்காமல் இருக்கலாம் அது எமது பிரதேசத்தின் சூழ்நிலையை பொருத்தது. ஆனால் அதிகளவான கட்டணங்களை அறவிடும் சந்தர்ப்பங்களில் இங்குள்ள மக்கள் முன்வைக்கும் முறைப்பாடுகள் சபை பெயரில் தான். எனவே தற்போது நாட்டின் சூழ்நிலையினை கருத்திற்கொண்டு களியாட்ட நிகழ்விற்கு அனுமதி கொடுப்பது தொடர்பாக நன்றாக சிந்தித்து தீர்மானமொன்றை எடுக்கவும். நிதிக்குழு சிபாரிசு செய்துள்ள இவ்விடயத்தினை நடைமுறைப்படுத்த சபையில் அனுமதி கொடுத்துவிட்டோமேயானால், மைதானத்தை கொடுத்துவிட்டார்கள் பிரதேச சபைக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்று பேச யாரும் இல்லை. பிரதேச சபைக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்று பேச யாரும் இல்லை. பிரதேச சபைக்கு தான் விரல் நீட்டப்படும். அச்சந்தர்ப்பத்தில் நாங்கள் அனுமதி மட்டும் தான் கொடுத்தோம் என்று யாரிடமும் சென்று தெளிவுப்படுத்திக்கொண்டு இருக்க முடியாது. அப்போது சமூக வலைதளங்கள் மற்றும் ஏனைய வகையில் இருந்து வரும் விமர்சனங்கள் வேறுவகையில் இருக்கும். ஆகவே களியாட்ட நிகழ்வுகளுக்கு வரும் நபர்களுக்கு குறைந்த விலையில் அவர்களால் இந்நிகழ்வுகளை நடத்த முடிந்தால் அவர்களை நிகழ்வினை நடத்த சொல்லுங்கள், அதன் மூலம் விமர்சனங்கள் ஏற்படுமாயின் இந்த களியாட்ட நிகழ்விற்கு தைானத்தை வழங்குவதென்பது ஏற்றுக்கொள்ள கூடியதாக இருக்குமாவென்பது சபையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் தீர்மானிக்க வேண்டும். மைதானத்தை Booking செய்து நிதிக்குழு சிபாரிசின் அடிப்படையில் செய்வது எங்களுக்கு பிரச்சினை இல்லை, ஆனால் அதன் பின்னர் ஏற்படும் சிக்கல்களையும் சிந்தித்து இதற்கொரு தீர்மானமொன்றை எடுக்கவும்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

நாட்டில் தற்போதுள்ள சூழ்நிலையில், இவ்வேளையில் களியாட்ட நிகழ்வுகளை நடாத்தி சபைக்கு வருமானம் தேடுகின்றனர் என யாரும் கூறிவிடக்கூடாது, இதனால் அனைவரும் பாதிப்படைவோம்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

ஆனால் நுவரெலியாவில் எல்லாம் களியாட்ட நிகழ்வுகள் நடைபெறுகின்றது.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

நுவரெலியா என்பது சுற்றுலாத்துறைக்கான இடம் தானே அது வேறு கதை.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ தவிசாளர் அவர்களே அண்மையில் எமது சபையின் 04ம் வருட பூர்த்தியினை முன்னிட்டு நிகழ்வொன்றினை ஏற்பாடு செய்திருந்தோம் அதற்கே பல விமர்சனங்கள் வந்தன. எனவே இந்த களியாட்ட நிகழ்வுகளை நடாத்துவது தொடர்பாக நன்கு ஆலோசித்து தீர்மானமொன்றை எடுக்கவும். இவ்விடயத்தை முற்று முழுதாக நிறுத்துங்கள் என்று நாங்கள் கூறவில்லை. இவ்விடயத்தின் பின் விளைவுகளை சிந்தித்து முடிவுகளை எடுக்கவும். தற்போது நாட்டு மக்கள் உள்ள நிலைமை எமக்கு நன்றாக தெரியும். களியாட்ட நிகழ்வுகளை நடத்தினால் கட்டாயமாக மக்கள் வருவார்கள் எனினும் நாம் அவர்களை கஸ்டத்தில் தள்ளக் கூடாது. எனவே இவ்விடயத்தின் பின்விளைவுகளை யோசித்து அதன் பின்னர் இதற்கான தீர்வினை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

சற்று முன் மைதானத்தை Booking செய்தால் போதும் டென்டர் முறையில் செல்லவில்லை என்று கூறப்பட்டது, இதே விடயத்தை தீபாவளி காலத்தில் ஒரு தனிநபர் நாம் களியாட்ட நிகழ்வுகளை நடத்தாத சந்தர்ப்பத்தில் அவர் 05 நாட்களுக்கு Booking செய்து களியாட்ட நிகழ்வுகளை நடத்த கேட்டால் சபை அனுமதி வழங்குமா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அதேவேளையில் இன்னொரு நபரும் வந்து கேட்டால் டென்டர் முறைக்கு தான் செல்ல வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இன்னொருவர் இல்லாமல் நிதிக்குழுவிற்கு கடிதமனுப்பி மைதானத்தை கேட்டால் வழங்குவீர்களா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

தீபாவளிக்கு பத்திரிகையில் விளம்பரம் பிரசுரித்து தான் டென்டர் போடுவோம்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

நான் விதண்டா வாதத்திற்கு இவ்விடயத்தை கேட்கவில்லை, மைதானத்தை Booking செய்தால் அவர்களுக்கு என்னென்ன வசதிகள் செய்துதரப்படும்?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

மின்சாரம் மற்றும் நீர் வசதிகள் வழங்கப்படும்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

மைதானத்தை பதிவு செய்பவர்களுக்கு மைதானத்தை வழங்கும் போது ஏதாவது நிபந்தனைகளை கூறுகின்றோமா? வாய் மூலமாக தானே கூறுகின்றோம். அன்று முச்சக்கரவண்டி சாரதிகள் மைதானத்தை Booking செய்து விட்டனர், இலவசமாக கேட்டோம் தரவில்லை, பின்னர் கட்டணம் செலுத்தி தான் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அன்று அவர்களுக்குள் ஒரு பிரச்சினை வந்தது. தாங்கள் மின்சாரத்தை நிறுத்தியது சரியா பிழையா? சபையினூடாக கொடுத்த ஒரு பட்டியல் காரணமாக தான் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

ஒரு முச்சக்கரவண்டி தரிப்பிடத்திலுள்ள சாரதிகள் இன்னொரு முச்சக்கரவண்டி சாரதிகளை விளையாட விடவில்லை, அதன் காரணமாக அன்றைய தினம் பெரிய பிரச்சினை ஒன்று அச்சந்தர்ப்பத்தில் ஏற்பட்டிருந்தது. தாங்கள் அச்சந்தர்ப்பத்தில் அங்கு இருக்கவில்லை.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

எனவே இனிவரும் காலங்களில் மைதானத்தை வழங்கும் போது சட்டத்திட்டங்களை குறிப்பிட்டு அறிவித்தலொன்றை வழங்கவும்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

களியாட்ட நிகழ்வு தொடர்பாக மைதானத்தை Booking செய்துள்ளது, பரவாயில்லை, யார் வேண்டுமானாலும் மைதானத்தை Booking செய்யலாம். இதன் பின்விளைவுகளை பற்றியும் பார்க்க வேண்டும். தற்போதுள்ள நாட்டின் சூழ்நிலையினை கருத்திற்கொண்டு தான் மைதானத்தை வழங்கியிருக்க வேண்டும். மைதானத்தை முதலில் வழங்கியதே பிழை. நாட்டில் போராட்டங்கள் நடைபெற்ற வண்ணமே உள்ளன. பாரிய போராட்டக்காரர்கள் மைதானத்திற்குள் நுழைந்து மைதானத்தில் ஏதாவது சேதம் ஏற்பட்டுவிட்டால் யாரிடம் சென்று கேட்புத, பொறுப்பான பதில் கூற வேண்டிய கடமை உள்ளது. ஒரே நேரத்தில் 02 நபர்கள் வந்து கேட்டால் என்ன செய்வது.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

முதலில் களியாட்ட நிகழ்வுகள் தேவையா இல்லையா என்பதனை பார்ப்போம். டிக்கட் தொடர்பான விபரங்கள் எவ்வாறு என்ற விபரங்களை முழுமையாக தாருங்கள்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

13ம் திகதி களியாட்ட நிகழ்வுகள் நடைபெறுவதென்றால் இன்று திகதி 11 எனவே அதற்கான எந்த ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை எனவே இவ்விடயம் தொடர்பாக பேசி இங்கு காலத்தை வீணாக்க வேண்டாம். மைதானத்தை Booking செய்துவிட்டால் அங்கு விடயம் முடிந்து விட்டது, களியாட்ட நிகழ்வுகளை நடத்த அனுமதி சபையில் வழங்கப்படாவிட்டல் பணத்தை திருப்பி கொடுத்துவிடுவீர்களா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

ஆம், அப்படியானால் பணத்தை திருப்பி கொடுக்க தானே வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

இதில் ஆரம்பமே பிழை, மக்கள் சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பாக தீர்மானமொன்றை எடுக்கும் போது சபைக்கு சமர்ப்பித்து தானே முடிவெடுக்க வேண்டும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

சபை முடிந்த பின்னர் தான் அவர்கள் வந்தார்கள்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

அப்படியானால் விசேட சபையை கூட்டியிருந்திருக்கலாம் தானே? இவ்விடயத்திற்கு சபையின் தீர்மானத்தோடு சென்றிருந்தால் இவ்வளவு பிரச்சினை ஏற்பட்டிருக்காது தானே? ஏனைய விடயங்கள் பரவாயில்லை இதற்கு கட்டாயம் சபை அனுமதியினை பெற்றிருக்க வேண்டும் தானே?

**கௌரவ உறுப்பினர் S.A.திஸாநாயக்க அவர்கள் (ஸ்ரீ.பொ.பெ)**

கௌரவ தவிசாளர் அவர்களே, களியாட்டம் ஒன்றை செய்வதற்காக ஒரு சில நாட்களுக்கு விளையாட்டு மைதானத்தை கேட்டுள்ளதாக செயலாளர் அவர்களினால் நிதி குழுவில் முன்வைக்கப்பட்டது. அது யாரால் நடத்தப்படுகின்றது என அச்சந்தர்ப்பத்தில் நிதி குழுவினால் கேட்கப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் எட்டியாந்தோட்டை பிரதேசத்தை சேர்ந்த ஒருவர் என கூறப்பட்டது. அவர்கள் இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடி டிக்கெட்டுகளை அச்சு பதித்து கொள்வதற்காக இன்றைய தினம் வருவதாகவும் கூறப்பட்டது. நிதிக்குழு கூட்டம் நிறைவு செய்யப்பட்டு நான் வெளியில் வரும்போது முத்தலி என்ற ஒரு நபர் நாங்கள் தான் களியாட்ட நிகழ்வை செய்கின்றோம் என என்னிடம் கூறினார். அதன் பின்னர் அதற்கான தீர்மானங்கள் எவ்வாறு எடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. இதில் ஒரு தொகை பணத்தை சபைக்கு வழங்குவதாக கூறப்பட்டதால் விளையாட்டு மைதானத்தை ஒதுக்கி கொடுப்பதற்காக நிதிக்குழு அனுமதி வழங்கியது. அதன் பின்னர் எடுக்கப்படவேண்டிய தீர்மானத்தை எழுத்து மூலமாக வழங்குவதா, அல்லது இங்கே குறிப்பிடப்பட்டுள்ள நேர அட்டவணைக்கு அமைவாக வழங்குவதா என முன்வைக்கப்படவில்லை. எனவேதான் அது இப்போது பிரச்சினையாகி உள்ளது. மற்ற விடயம் என்னவென்றால் களியாட்டம் யாரால் நடத்தப்பட்டாலும், இப்போது பிரச்சினையாக உள்ளது நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமையுடன் ஒப்பிடும்போது அதன் கட்டணங்கள் அதிகம் என்பதால் மக்களுக்கு அது ஒரு சுமையாக காணப்பட்டமை யாகும். இருப்பினும் நிறுவனமும் அசௌகரியத்துக்கு உட்பட வேண்டியுள்ளது. அதாவது அவர்களும்

தொலைதூரத்திலிருந்து பொருட்களை கொண்டுவந்து இவ்வாறான நிகழ்வை செய்யும்போது அது அவர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே இவ் விடயங்களையும் கவனத்திற் கொண்டு பொதுமக்களுக்கு ஏதாவது ஒரு வகையில் நியாயம் கிடைக்கக் கூடியவாறு இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடி அவர்களையும் அழைத்து ஒரு தீர்மானத்துக்கு வாருங்கள்.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

நாட்டினுடைய சூழ்நிலையினை கருத்திற்கொண்டும், எமது பிரதேச மக்களின் வருமானத்தை கருத்திற்கொண்டும் இந்த களியாட்ட நிகழ்வுகளை நடத்துவது பொருத்தமானதாக இருக்குமா என்பது எனது கருத்து, வருடத்திற்கொருமுறை இவ்வாறான நிகழ்வுகள் நடைபெறும் போது சிறுவர்கள் அனேகமானவர்கள் அதனை விரும்புவார்கள் அவர்களின் விருப்பத்தை பூர்த்தி செய்யும் வகையில் குடும்ப சூழ்நிலைகள் தற்போது இல்லை. சபையின் வருமானத்தை தடை செய்ய வேண்டும் என்பதற்காக இதனை கூறவில்லை. மக்கள் சார்பாகவும் கடந்த வாரம் நுவரெலியாவில் ஏற்பட்ட நிகழ்வினையும் கருத்திற்கொண்டு இவ்விடயத்தை நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவும்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

எமது முன்மொழிவுகளும் யோசனைகளும் மட்டுமே இங்கே முன்வைக்கப்பட்டுள்ளது. சபைக்கு பொருத்தமானது என்றால் இது தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுங்கள். எனது தனிப்பட்ட கருத்தினை தவிசாளர் அவர்களுக்கு கூறிவிட்டேன். அதன்படி தாங்கள் ஒரு தீர்மானத்தை எடுங்கள். தற்போதைய நிலையை கருத்தில் கொண்டுதான் தங்களை ஒரு தீர்மானத்தை மேற்கொள்ளும்படி கேட்கின்றேன். இறுதியில் நிதிக்குழுவோ நாங்களோ தலையீடு செய்து இதற்கு பதில் அளிக்க முன் வர மாட்டோம். தேவை ஏற்படின் அரசியல் மட்டத்தில் வேறுவகையில் இதனை கொண்டு செல்லலாம். அந்த நேரத்திலே எங்களை குற்றம் சாட்டி அல்லது வேறு வழியிலே ஏதாவது செய்து அல்லது கூறி இதனை நடைமுறைப்படுத்தலாம். அப்படித்தானே நடக்கிறது. எனவே தாங்களும் உத்தியோகத்தர்களும் இணைந்து ஒரு பொருத்தமான தீர்வினை பெற்றுக் கொள்ளுமாறு தான் நாங்கள் கேட்கின்றோம். எங்களது முன்மொழிவுகளையும் கருத்துக்களையும் நாங்கள் முன்வைத்து விட்டோம். அதனை நிறுத்துமாறு கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்களும் தனது கருத்துக்களை முன்வைத்துள்ளார். தற்போது காணப்படுகின்ற சூழ்நிலையில் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் தொடர்பாகவும் கருத்தில் கொண்டு நானும் இதனை நிறுத்துமாறு கேட்கின்றேன். அதன்படி தாங்கள் நிதிக்குழு உறுப்பினர்களாகிய கௌரவ உறுப்பினர்களுடன் கலந்துரையாடி இவ்விடயம் தொடர்பில் தீர்மானம் ஒன்றை மேற்கொண்டால் அதில் எங்களுக்கு பிரச்சினை இல்லை. சபை என்ற வகையில் என்னுடைய கருத்து இவ்வளவுதான் என்பதை ஆணித்தரமாக கூறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இந்த விளையாட்டு ஏதோ ஒரு வகையில் கேளிக்கையாகி விட்டால் நானும் இதற்கு வீதியில் இறங்கி போராடுவதற்கு தயார். தற்போது காணப்படுகின்ற சூழ்நிலையில் இது ஒரு விளையாட்டு வேலை அல்ல. கட்டாயம் வீதிக்கு இறங்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

**கௌரவ உறுப்பினர் K.யோகேந்திரன் அவர்கள் (ஐ.ம.சு.மு)**

கௌரவ தவிசாளர் அவர்களே, ஏனைய கௌரவ உறுப்பினர்களின் ஆலோசனைப்படி இந்த களியாட்ட நிகழ்வுகளை இத்தருணத்தில் மேற்கொள்ள வேண்டுமா என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில் மஸ்கெலியா தொகுதியிலுள்ள மக்களின் வருவாயினை கருத்திற்கொண்டு இக்களியாட்ட நிகழ்வுகளை நிறுத்த நாம் ஆலோசனை ஒன்றை அவர்களுக்கு வழங்கலாம், ஏதாவது செய்து மக்கள் கூட்டம் அங்கு வருவார்கள், எனினும் இது மக்கள் மத்தியில் ஒரு பாதிப்பை ஏற்படுத்தும். விமர்சனங்கள் வரும் அவை அனைத்திற்கும் பதில் கூற வேண்டியது இந்த சபையாக தான் இருக்கும். எனவே இவ்விடயத்தில் சற்று சிந்தித்து செயற்படுவோம்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள் (இ.தொ.கா)**

கடந்த நிதிக்குழுவிற்கு நான் வருகை தரவில்லை, தற்போது நாட்டின் காலநிலை சரியில்லை, மக்கள் களியாட்ட நிகழ்வில் கலந்துக்கொள்வார்கள், சில விமர்சனங்களும் வரும், அத்துடன் தற்போது நாட்டின் நிலைமையினையும் கருத்திற்கொண்டு இவ்விடயத்தை நிறுத்த எனது ஆலோசனையினை வழங்குகின்றேன். இதே போல ஏனைய சந்தர்பங்களில் மைதானத்தில் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறும் போது அதற்கும் ஏற்றவகையான தீர்மானத்தை எடுக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். தற்போது எல்லாமே ஒப்பந்த அடிப்படையில் தான் நடைபெறுகின்றது, தீபாவளி காலத்தில் நாட்டின் சூழ்நிலை நன்றாக இருந்தால் நான்

ஒருவரை கொண்டுவருகின்றேன் நீ ஒருவரை கொண்டு வாருங்கள் என்ற விடயங்களையும் கருதி அந்த நேரத்தில் இவ்வாறான தீர்மானமொன்றை எடுக்க வேண்டி வரும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

குறித்த நபர்களிடம் பேசி இவ்விடயத்தை நிறுத்தி விடலாம், ஆனால் நாட்டின் சூழ்நிலை சரியாகும் வரை எந்தவொரு விடயத்திற்கும் மைதானத்தை கொடுக்க முடியாது.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இவ்வேளையிலே கௌரவ தவிசாளர் அவர்களுக்கும் ஏனைய கௌரவ உறுப்பினர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இன்றைய சூழ்நிலைக்கேற்ப தான் நாங்கள் தீர்மானமெடுக்குமாறு நாங்கள் கூறினோம், தாங்கள் இவ்விடயத்தை விரும்புவீர்களானால் கட்டணத்தை திருப்பி செலுத்துவதில் சிக்கல் இருந்தால்,

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் அவர்களே ஒரு விடயத்தில் சபைக்கு வருமானம் வருமென்றால் அதனை நான் செய்வேன், அதனை தேவையில்லை என்றால் அதனை திருப்பிக்கொடுப்பதில் பிரச்சினை ஒன்றும இல்லை, நேற்று கூட நுவரெலியாவில் களியாட்ட நிகழ்வுகள் நடைபெறுவதனை நான் பார்த்தேன்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ தவிசாளர் அவர்களே முதலில் நாங்கள் கூறவரும் விடயத்தை தாங்கள் புரிந்துக்கொள்ளுங்கள்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

எனக்கு புரியவில்லை என்று நினைக்கின்றீர்களா, நான் விளங்கி தான் விளங்கி தான் பேசுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

டிக்கட்டில் சபையின் பதவி முத்திரையை தான் அடிக்கப்போகின்றீர்கள், எனவே பிரச்சினை வராமல் இவ்விடயத்தை மேற்கொள்ளுமாறு தான் கூறுகின்றேன் செய்ய வேண்டாமென கூறவில்லை.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

தாங்கள் சற்று முன்னர் தான் கூறினீர்கள் ஏதும் பிரச்சினை ஏற்பட்டால் தாங்களே பாதைக்கு இறங்குவீர்கள் என்று கௌரவ உறுப்பினர் அவர்களே இவ்வாறு கூறும் போது என்ன செய்வது?

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

ஏதாவது அசம்பாவிதங்கள் நடந்தால் மாத்திரம் தான் நான் இறங்குவேமென நான் கூறினேன், அதனை விளங்கிக்கொள்ளவும்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

களியாட்ட நிகழ்வு தொடர்பான விடயங்களோடு எமது மக்களின் நலன் கருதியே எமது கௌரவ உறுப்பினர்கள் தமது கருத்துக்களை முன்வைத்திருந்தனர். இருந்தாலும் கூட இதனூடாக சம்பந்தப்பட்ட மக்கள் நலன் கருதி மஸ்கெலியா நகரில் எல்லா இடங்களையும் விட அதிக விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றது. இவ்விடயத்தை பற்றியும் சற்று தேடிபார்க்கவும், மேலும் மஸ்கெலியாவில் எல்லா இடங்களிலும் எரிவாயு இல்லை என்று கூறப்படுகின்றது, ஆனால் அனைத்து கடைகளிலும் எரிவாயு உள்ளது, தவிசாளர் உட்பட அனைத்து கௌரவ உறுப்பினர்களும் ஒன்றிணைந்தால் இதற்கான தீர்வை பெறலாம், மக்களுக்கான எரிவாயுவினை பெற்றுக்கொடுக்கலாம் மக்களின் நலனை கருதி இவ்விடயத்திலும் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன், ஏனைய இடங்களில் நான் அரிசி விலையினையும் விசாரித்துப் பார்த்தேன் அவ்விடயங்களை விட மஸ்கெலியாவில் அதிகமான விலைக்கு அரிசி விற்கப்படுகின்றது, இதற்காக இச்சபையில் இருந்து குரல் இதுவரையில் எழுப்பப்படவில்லை. மக்களின் நலனை கருதி களியாட்ட நிகழ்வுகள் வேண்டமென கூறுகின்றோம் இதிலும் சற்று கரிசனை காட்டுங்கள். நிரப்பப்பட்டுள்ள எரிவாயு கொள்கலன்களை வெற்று கொள்கலன்கள் போல காட்சிப்படுத்தியுள்ளனர், நல்லதண்ணியில் உள்ளவர்களுக்கு இங்கிருந்து 5000.00ரூபாவிற்கு எரிவாயு விற்பனை செய்யப்படுகின்றது, ஆனால் இந்த பிரதேசத்திலுள்ள மக்களுக்கு 3000.00ரூபா கொடுத்து கொள்வனவு செய்ய தயாராக

உள்ளனர் ஆனால் வழங்க எரிவாயு இல்லை. கடைகளில் மண்ணெண்னை விற்பனை செய்யப்படுகின்றது. அண்மையில் ஒரு நாள் அதிகாலையில் எரிவாயு இறக்கினார்கள், அப்போது இறக்கப்பட்ட எரிவாயு கொள்கலன்களை அப்போதே ஏற்றினார்கள், நான் தான் அங்கு சென்று பிரச்சினை செய்து அவ் எரிவாயு கொள்கலன்களை மக்களுக்கு வழங்க முன்னின்று செயற்பட்டேன், அவ்வேளையில் நான் 119ற்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டேன், பொலிஸ் நிலையம், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, விசேட அதிரடிப்படையினர் அனைவருக்கு தொலைபேசி அழைப்பினை மேற்கொண்டிருந்தேன், நான் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டது அதிகாலை 05.45, 06மணி அளவில் இருக்கும் அவர்கள் இங்கு வந்தது 07மணிக்கு டீசல் இற்கும் இவ்வாறு தான் சம்பந்தப்பட்ட 04,05 பேர் பஸ்ஸில் நிரப்பப்பட்ட டீசலினை கொள்கலன்களில் நிரப்பிக்கொள்கின்றார்கள் இதனால் தான் பிரச்சினை, நெருக்கடி நிலை ஏற்படுகின்றது. இவ்வாறான அத்தியாவசிய சேவைக்கும் நாம் சபையினூடாக அழுத்தத்தை வழங்க வேண்டும் என்பது எனது கருத்தாகும்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

எரிபொருள் நிரப்பு நிலையம் 24 மணித்தியாலங்களும் திறந்திருக்க வேண்டும் என்று கௌரவ உறுப்பினர் கே. ஜி. கே. பெரேரா அவர்கள் கடந்த சபை அமர்வின் போது கூறினார். இவ்விடயத்தை எவ்வாறு சபையில் கலந்துரையாட முடியும் எனக்கூறி எரிபொருள் நிரப்பு நிலையத்தின் முகாமையாளர் என்னுடன் சண்டைக்கு வந்தார். கூட்டுறவு சங்கத்தின் செயலாளர் சபையினை மதிக்க மாட்டார் என்றும் கூறினார். எரிபொருள் நிரப்பு நிலையத்தினை 24 மணித்தியாலங்களும் திறந்து வைக்க வேண்டும் என்று தங்களது சபையில் எவ்வாறு தீர்மானம் மேற்கொள்ள முடியும் என்று யோசனையை முன்வைத்த தங்களை தூசண வார்த்தைகளால் திட்டினார். இந்த விடயத்தினை சபையில் கலந்துரையாடும் போது நாங்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கலாம். நாங்கள் வெவ்வேறு கட்சிகளை சார்ந்தவர்களாக இருக்கலாம். இருப்பினும் ஒரு உறுப்பினருக்கு கையை நீட்டும் போது நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். நான் ஆனந்த என்பவருடைய லொரியில் பயணித்துக் கொண்டிருக்கும்போது மக்கள் நடமாட்டம் அதிகமாக காணப்பட்ட இடத்திலிருந்து ஏன் எங்கள் எரிபொருள் நிரப்பு நிலையத்தினை 24 மணித்தியாலங்களும் திறந்துவைக்க சொல்கின்றீர்கள்? ஏன் சபை பெரிதோ? என்றவாறு என்னிடம் சத்தமிட்டு கேட்டார். அவ்வாறான விடயங்களுக்கு நாங்கள் ஆயத்தமாகும் போது இவ்வாறான பிரச்சினைகளையும் எதிர்பார்த்து தான் செல்ல வேண்டும். கேஸ் சிலிண்டர் வழங்குவதற்காக மூன்று நாட்களுக்கு முன்னர் பணத்தைப் பெற்றுக்கொண்டு பெயர் பட்டியல் ஒன்றினை தயாரித்து அதில் உள்ளவர்களுக்கு மாத்திரம் கேஸ் வழங்கியதாக அன்றைய தினம் உறுப்பினர் ஆனந்தன் அவர்கள் கேட்டார். அதனால்தான் பிரச்சினை ஏற்பட்டது. சபை எப்படி எங்கள் மீது இவ்வாறான தீர்மானங்களை மேற்கொள்ள முடியும் என்று கேட்டார். இவ்வாறு பேசிக் கொண்டு அவர்களுடைய நடத்தை மாறும் போது எனக்கு கோபம் ஏற்பட்டால் இப்பிரச்சினை வேறு விதமாக மாறி இருக்கும். இருப்பினும் அது ஒரு பிழையான வேலை. எனவே மேற்படி விடயத்தை அமுல்படுத்துவது என்றால் இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க ஆயத்தமாகிக் கொண்டு அமுல் படுத்த வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

இவ்விடயம் தொடர்பாக நானுமொரு விடயத்தை கூறலாமென நினைக்கின்றேன். கோதுமை மா விலை அதிகரிப்பதற்கு முன்னராக 2500 கோதுமை மா பக்கட்டுகளை பதுக்கி வைத்திருந்த விடயத்தை நான் உடனடியாக செயலாளருக்கு தெரிவித்திருந்தேன், இதனை நுகர்வோர் அதிகார சபைக்கு தெரிவிக்க வேண்டும் என கூறியிருந்தேன், இவ்வாறு மஸ்கெலியாவில் நடைபெறும் விடயங்களை நாம் தெரிவித்து எங்களது கடமைகளை நாங்கள் சரியாக செய்து வருகின்றோம், எனினும் இவ்விடயம் மேலிடத்திற்கு செல்லும் போது அவ்விடயத்திற்கு எவ்வித நடவடிக்கையும் இல்லை.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இந்த மாவு பிரச்சினை தொடர்பாக நுவரெலியாவிற்கு கடிதம் சென்றதும், அவ்விடயத்திற்கு சம்பந்தப்பட்டவர்கள் என்னிடம் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு கேட்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

இதேபோல தான் கொரோனா காலத்திலும் ஒரு விடயம் நடைபெற்றது, பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தினூடாக செய்யப்படும் விடயங்களில் சபை தலையிட முடியாதென அவர்கள் நினைக்கின்றார்கள், இதனை ஏந்தவகையில் கட்டுப்படுத்த போகின்றோம், மஸ்கெலியா பிரதேச சபையில் பேசப்படும் விடயங்களுக்கு ஒரு அங்கீகாரம் உள்ளது என்று ஒரு விடயம் இருந்தால் எரிபொருள் நிரப்பும் நிலைய முகாமையாளர் கௌரவ உறுப்பினர் கே.ராஜ்குமார் அவர்களை எதிர்த்து பேசியிருக்க மாட்டார், அன்றும் நான் தான் அமைதியாக செல்லும்படி கௌரவ உறுப்பினருக்கு கூறினேன், சபையில் பேசப்படும் விடயங்கள்

உடனடியாக வெளியில் கொண்டு செல்லப்படுகின்றது, சபைக்கென ஒரு மதிப்பு உள்ளது, அதற்கமைவாக சபையை கொண்டு நடத்த வேண்டும். அண்மையில் பதுக்கப்பட்ட 35 எரிவாயு கொள்கலன்களை பொலிசாரை வைத்து கௌரவ உறுப்பினர் ராஜ்குமார் அவர்கள் வெளியில் எடுத்திருந்தால் எரிவாயுவினை சிறிது காலத்திற்கு கொள்வனவு செய்யாமல் இருந்தால் இதற்கான தீர்வொன்று கிடைக்கப்பெறும்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

பழைய விலை பொருட்களுக்கு புதிய விலையில் ஸ்டிக்கர் ஓட்டி விற்பனை செய்கின்றனர்.

**கௌரவ உறுப்பினர் K.G.K.பெரேரா அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் கூறியதன் படி நான் அன்றைய தினம் எரிபொருள் நிரப்பு நிலையம் தொடர்பான பிரச்சினையை முன்வைப்பதற்கான காரணம் அதிகமானவர்கள் என்னிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க சிவனொளிபாத மலையை தரிசிக்க வரும் யாத்திரிகளுக்காக இந்த எரிபொருள் நிலையத்தை இரவுபகல் சேவை வழங்கும் நிலையமாக மாற்றியமைத்து திறந்து வைத்து இருந்தால் அம்மக்களுக்கு வசதியாக இருக்கும். இதனை ஒரு யோசனையாக சபைக்கு முன்வைத்து கலந்துரையாடுங்கள் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்கவே நான் முன்வைத்தேன். கூட்டுறவு நிலையம் என்பதும் எம்மைப் போன்று மக்களுக்காக சேவை வழங்கும் ஒரு நிறுவனமாகும். கௌரவ தவிசாளர் அவர்களே அவர்களுக்கு அவ்வாறு பேச முடியாது. அவர்களும் மக்களுக்கான சேவையை தான் வழங்குகின்றார்கள். எனவே அவர்களுக்கு இவ்வாறு எங்களை தூசன வார்த்தைகளால் திட்ட முடியாது. எனக்கு இவ்விடயம் தொடர்பில் இப்போதுதான் தெரியும்.

கௌரவ உறுப்பினர் சுரேஸ்குமார் அவர்கள் கூறியதுபோன்று எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெரல்களுக்கு அதிகமாக எரிபொருள் வழங்குவதனை தான் செய்கின்றார்கள். பின்னர் அவர்கள் அதைவீடுகளிலே வைத்துக் கொள்கின்றார்கள். அந்த எரிபொருள் முடிவடைந்தவுடன் அவர்கள் மீண்டும் வந்து எரிபொருள்களை பெற்றுச் செல்கின்றனர். இவ்வாறான செயற்பாடுகளினால் தான் இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இவ்வாறு எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அனேகமானோர் கூறுகின்றனர். இது நாடு பூராவிலும் காணப்படுகின்ற ஒரு பிரச்சினை. யாராலும் இதனை மறுக்க முடியாது. என்னை திட்டினால் பரவாயில்லை. இதைவிட பல்வேறு விடயங்களைக் கூறி மக்கள் திட்டுகிறார்கள். தாங்களும் மக்களுக்காக சேவை வழங்குவதனை கூட்டுறவு சங்க அதிகாரிகளும் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். அவர்களும் சேவையினை தான் வழங்குகின்றார்கள். எனவே இந்த சந்தர்ப்பத்தில் எனக்கு இதனை கூற வேண்டிய நிலை ஏற்பட்டது. மஸ்கெளிய மக்கள் பேசும் முறை இன்று மட்டுமல்ல அன்று முதல் எங்களுக்கு தெரியும். கௌரவ தவிசாளர் அவர்களே சபையிலும் கூட அதிகமான விடயங்களை பேசாமல் தவிர்த்துக் கொள்வது இதனால்தான்.

**கௌரவ உறுப்பினர் S.A.திஸாநாயக்க அவர்கள் (ஸ்ரீ.பொ.பெ)**

எரிபொருள் நிலையத்திலிருந்து இரவு பகல் சேவையினை பெற்றுத்தருமாறு தான் அன்றைய தினம் கௌரவ உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். நாமும் அதிகாலையில் பயணங்களை மேற்கொள்ளும் போது சிவனொளிபாத மலை யாத்திரைக்காக வந்த மக்கள் எரிபொருள் இன்றி பஸ்களை கொண்டுவந்து எரிபொருள் நிலையத்திற்கு அருகாமையில் நிறுத்தி வைத்துக் கொண்டிருப்பதை காண்கின்றோம். இரவு பகல் சேவையினை பெற்றுக் கொடுத்தால் இந்த எரிபொருள் நிலையத்தில் இருந்து அவர்களுக்கு சேவை ஒன்று கிடைக்கும். அந்த பிரேரணையை சபைக்கு முன்வைத்து மக்களுக்கான சேவையை பெற்றுக் கொடுப்பதற்காகவே அந்த உறுப்பினர் செயற்பட்டார். அவரை தூ'ண வார்த்தைகளால் திட்டி இருந்தால் அது தொடர்பில் தேடி ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு கௌரவ தவிசாளர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்கள் தொடர்பில் ஏதாவது பொருத்தமற்ற செயற்பாடுகள் ஏற்படும் பட்சத்தில் அது சம்பந்தமாக பேசுவதற்கு சபையின் கௌரவ உறுப்பினருக்கு உரிமை உண்டு. அன்றைய தினம் எங்களோடு வரிசையில் நின்று எரிபொருளை பெற்றுக்கொண்ட பஸ் வண்டி உரிமையாளர்கள் மீண்டும் மறுதினம் வரிசையில் நின்று பெரல்களில் எரிபொருளை பெற்றுக் கொண்டனர். கிடைப்பவருக்கு கிடைக்கின்றது. இல்லாதவருக்கு கிடைப்பதில்லை. அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்கள் பொருளாதார ரீதியாக விழுகிறார்கள். ஒரு நாள் அதிகாலை 2.00 மணியளவில் லொரி ஒன்று வந்து எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளை பெற்றுக்கொள்வதனை, எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக பஸ் வண்டி வரிசையில் காத்திருந்த சாரதி ஒருவர் என்ன நடக்கின்றது என்று அவதானித்து அதனை வீடியோ செய்துள்ளார். அப்போது அந்த பஸ் வண்டி சாரதியையும் வந்து எரிபொருளை பெற்றுக் கொள்ளுமாறு கூறி இருக்கின்றார்கள். பஸ் வண்டிக்கு எரிபொருள் நிரப்பி முடிந்ததும் கேன் ஒன்றுக்கும் 20 லீற்றர் எரிபொருள் வழங்கியிருக்கின்றார்கள். அந்த

இடத்திலே ஊழல் இடம்பெறுகிறது. வாகனத்தில் தரித்து நிற்காது வீடுகளுக்குச் சென்ற மக்கள் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக வரிசையில் காத்திருக்க வேண்டும். அந்த இடத்திலே வியாபாரம் ஒன்று தான் நடை பெறுகின்றது. எனவே சபையின் மூலமாக இவற்றிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு அல்லாது கௌரவ உறுப்பினர் என்ற வகையில் கதைத்தார் என்பதற்காக அவரை தூசண வார்த்தைகளால் திட்டி அச்சுறுத்த முடியாது.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

மஸ்கெலியாவை பொறுத்தவரையில் அரசியல்வாதிகள் என்றால் நாங்கள் 16பேர் தான், நாம் மக்கள் சார்பாக என்ன செய்தோமென கேள்வி எழுப்பப்படும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

02 நாட்களுக்கு முன்னர் நானுமே வரிசையில் நிற்க வேண்டிய நிலை தான் உள்ளது. தற்போது தான் பொலிசார் தலையிட்டு தற்போது விபரங்களோடு எரிபொருள் வழங்கப்படுகின்றது.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

தற்போது எரிபொருள் நிலையத்திற்கு வரும் டீசலினை சமமான முறையில் அனைவருக்கும் வழங்க சபையினூடாக ஆலோசனை ஒன்றை வழங்கவும்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள் (இ.தொ.கா)**

இரவு 12 மணிக்கு மேல் நிறைய வாகனங்களுக்கு டீசல் வழங்கப்படுகின்றது, எரிபொருள் நிலையத்தில் கடமையில் ஈடுபடும் ஊழியரும் ஒரு வருமானத்தை எதிர்பார்த்து வேலை செய்கின்றார், நாம் மக்களுக்கு ஒரு தீர்வினை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் A.ரவீந்திரராஜா அவர்கள் (ஐ.தே.க)**

கடந்த 03 நாட்களாக எரிபொருளை பெற்றுக்கொள்ள நான் வரிசையில் இருந்தேன், ஒரு நாள் இரவு நேரத்தில் வேறு வாகனங்களுக்கு முறையற்ற ரீதியில் எரிபொருளை வழங்க முடியாமல் நாங்கள் வாகனத்தை தரித்து வைத்திருந்தோம். எமது மக்களை நிறைய பழிவாங்குகின்றனர். எரிபொருள் நிலையத்தில் இதேபோன்று மண்ணெண்ணெயினை மக்களுக்கு பெற்றுக்கொடுக்க நான் உதவியினை பெற்றுக்கொடுத்தேன். கிட்டதட்ட 06 நாட்களாக நான் அங்கு இருந்தமையினால் அங்கு நடைபெறுகின்ற விடயங்கள் தொடர்பாக எனக்கு நன்றாக தெரியும், வசதியானவர்களுக்கு தான் சலுகை வழங்கப்படுகின்றது. எரிபொருள் நிலையம் வேறு நிர்வாகத்தின் கீழ் வந்தாலும் அதனை சுத்திகரிப்பது பாதுகாப்பது போன்ற விடயங்களை நாமே செய்கின்றோம், எனவே இவ்விடயத்திற்கு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**தீர்மான இல 05**

தற்போது நாட்டின் சூழ்நிலையினை கருத்திற்கொண்டு களியாட்ட நிகழ்வுகளை இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

**குறிப்பு** – களியாட்ட நிகழ்வுகளை நடத்துவதற்காக குறித்த நபர்கள் மைதானத்திற்கு களியாட்ட நிகழ்வுகளுக்கான பொருட்களை மைதானத்திற்கு கொண்டு வந்து இறக்கியதன் காரணமாகவும் ஏற்கனவே மைதானத்திற்கான கட்டணத்தை செலுத்தியிருந்தமையினாலும் இவற்றை கருத்திற்கொண்டு சபை நிறைவுற்றதும் கௌரவ உறுப்பினர்களுடன் தொலைபேசியில் கலந்துரையாடி களியாட்ட நிகழ்வுகளுக்கான அனுமதியினை பெற்றுக்கொடுக்க தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

செலவறிக்கையிலே, தவிசாளரின் உத்தியோகபூர்வ வாகன சாரதிக்கான மாதாந்த சம்பளம் என்று ஸ்ரீ பவித்திரன் என்பவருக்கு 36,000.00ரூபா வழங்கப்பட்டுள்ளது, ஆரம்பத்தில் இவர் தாங்களின் இணைப்பு செயலாளராக இருந்தார்,

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

ஆம், தற்போது பிரவீணா என்பவரை இணைப்பு செயலாளராக மாற்றம் செய்துள்ளோம்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

சபையில் வேறு சாரதிகள் இல்லையா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இல்லை, அத்துடன் எனது பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் தான் சாரதி ஒருவரை நியமிக்க முடியும். அண்மையில் கொழும்பிற்கு சென்று வரும் போது இடையில் பிரச்சினை ஏற்பட்டு வீட்டிற்கு வரும் போது அதிகாலை 02.30மணி , இவ்வாறான சந்தர்ப்பங்களில் நம்பிக்கையான ஒருவரை தான் அழைத்து செல்ல முடீயம் ஏற்கனவே இருந்த வாகன சாரதி வேலைக்கு சரியாக வருவதில்லை.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

தவிசாளர் அவர்கள் கூறினீர்கள், மேலதிகமாக சபையில் சாரதிகள் இல்லையென, அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் 01 இலட்சம் வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் வந்த 03 சாரதிகள் உள்ளனர் தானே?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

ஆம், அதில் ஒருவரை அண்மையில் கூட்டமொன்றுக்கு அழைத்து சென்றோம், அவரால் முறையாக வாகனத்தை செலுத்த முடியவில்லை, பின்னர் கௌரவ உறுப்பினர் திஸாநாயக்க தான் வாகனத்தை செலுத்தினார் இப்படிபட்டவர்களினை நம்பி நான் எவ்வாறு தூர பயணங்கள் செல்வது? எனது பாதுகாப்பை நான் பாரக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

சபையின் நிதி நிலைமையினை கருத்திற்கொண்டு தான் நான் இவ்விடயங்களை கூறினேன், மாவட்ட செயலகத்தினால் ஒரு சாரதியினை அனுப்பும் போது வாகன சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாத ஒருவரையா அனுப்புவார்களா? அவர்கள் மீது நம்பிக்கை இல்லையா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இல்லை, தலைவருக்கு ஏற்ற ஒருவரை தான் சாரதியாக வைக்க முடியும், எனது பாதுகாப்பையும் உறுதி செய்ய வேண்டும் தானே? தலைவர் வருவது கூட தெரியாமல் பாதையில் கதைத்துக்கொண்டு இருப்பவர்களை மரியாதை தெரியாதவர்களை எவ்வாறு நான் சாரதியாக வைப்பேன்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

அது, நிர்வாக பிழை, வேலைக்கு வருபவர்களை எவ்வாறு நிர்வகிக்க வேண்டும் என்று தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

என்னேரமும் தலைமைத்துவம் அவர்கள் பின் ஓடிக்கொண்டிருக்க முடியாதே, நான் அனுப்ப வேண்டிய இடத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளேன்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

தாங்களின் இணைப்பு செயலாளருக்கு பதிலாக புதிதாக ஒருவரை மாற்றியுள்ளீர்கள் அது எங்களுக்கு பிரச்சினை இல்லை, தாங்களின் உத்தியோகபூர்வ சாரதியாக வெளியில் உள்ள சாரதியினை உள்ளீர்க்க ஏற்பாடுகள் உள்ளதா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

உள்ளது, அவ்வாறு தெரிவு செய்யப்படும் சாரதி எனக்கு பாதுகாப்பானவராக இருக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

வாகனத்திற்கான சாரதியாக பிரத்தியோகமாக ஒருவரை எடுக்கும் போது கொடுப்பனவு செலுத்துவது தவிசாளரின் கடமைக்கு உள்ளேயா உள்ளதா அல்லது இந்த நிர்வாக பொறிமுறைக்குள்ளேயே உள்ளதா?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

தற்காலிக ஊழியர் தான்

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

எமது பிரதேச சபையின் நூலக செயற்பாடுகள் மிகவும் சிறப்பாக உள்ளது, போட்டிகளில் கலந்துக்கொண்டு பரிசில் கிடைக்கப்பெற்றுள்ளன அதற்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள் (இ.தொ.கா)**

நிதிக்குழு அறிக்கை சரியென முன்மொழிகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.G.K.பெரேரா அவர்கள் (இ.தொ.கா)**

அதனை நான் வழிமொழிகின்றேன்.

**2022.04.06 நடைபெற்ற நிதிக்குழு அறிக்கையின் சிபாரிசுகள் சபையில் பின்வருமாறு தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன.**

**விடய இல 01**
அலுவலக காகிதாதி பொருட்களின் விலையேற்றம் மற்றும் அவற்றை கொள்வனவு செய்வதில் உள்ள சிக்கல் நிலைமைகள் தொடர்பான விடயம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 06**
பொருட்களின் அவசியத்தன்மையினையும் அடிக்கடி ஏற்படும் பொருட்களின் விலையேற்றத்தினையும் கருத்திற்கொண்டு Shopping System முறையில் பொருட்களை உடனடியாக கொள்வனவு செய்ய சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 02**
காரியாலய பாவனைக்கான டோனர்களை கொள்வனவு செய்வது தொடர்பான விடயம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 07**
குறிப்பிட்ட டோனர்களை கொள்வனவு செய்ய சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 03**
RF – 7744 இலக்க டிரக்டர் சேர்விஸ் மற்றும் டயர் மாற்றம் தொடர்பான கடிதம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 08**
தொழிநுட்ப குழுவிற்கு இவ்விடயத்தை முன்வைத்து தொழிநுட்ப குழு சிபாரிசின் அடிப்படையில் RF – 7744 இலக்க டிரக்டர் சேர்விஸ் செய்வது மற்றும் டயர் மாற்றம் ஆகிய விடயங்களுக்கு சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 04**
மின்தடை ஏற்படும் சந்தர்பங்களில் அலுவக பாவனைக்காக ஜனரேட்டர் இயந்திரத்தினை பயன்படுத்துவது தொடர்பான விடயம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 09**
மேற்குறிப்பிட்ட விடயத்திற்கமைய தேவையான பொருட்களுக்கான உத்தேச விலைமதிப்பீட்டின் அடிப்படையில் விடயத்தினை மேற்கொள்ள சபை அனுமதி வழங்கியது.

**விடய இல 05**
காரியாலய செயற்றிறன் போட்டிகளுக்கான முன்னேற்பாடுகளை செய்வது தொடர்பான கடிதம் நிதிக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டது.

**தீர்மான இல 10**
மேற்படி விடயத்தினை உத்தேச விலைமதிப்பீட்டின் அடிப்படையில் வேலைத்திட்டங்களை மேற்கொள்ள சபை அனுமதி வழங்கியது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இச்சபையினை அமைதியாக நடாத்திச் செல்ல ஒத்துழைப்பு வழங்கியமைக்கு நன்றி. இத்துடன் இச்சபை இனிதே நிறைவுறுகின்றது.

நன்றி வணக்கம்.

**G.செண்பகவள்ளி,**
**கௌரவ தவிசாளர் அவர்கள்,**
**மஸ்கெலியா பிரதேச சபை,**
**மஸ்கெலியா.**

**S..ராஜவீரன்,**
**செயலாளர்,**
**மஸ்கெலியா பிரதேச சபை,**
**மஸ்கெலியா.**